அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல : 22/99

எனது இல. ஈ/III/5/5/12,
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
08, ஒக்டோபர் 1999.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின்/
நிய்திச் சட்டச் சபைகளின் தலைவர்கள்
அனைவருக்கும்.

**அரசாங்க அலுவலர்கள்/ நீதித்துறை அலுவலர்கள் ஆகியோருக்கும் அரசாங்கக் கூட்டுத்தாபன, நியதிச்சட்டச் சபைகளின் அலுவலர்களுக்கும் அரசகரும போக்குவரத்து வசதிகள் அளித்தல்**

1984.08.15 ஆம் தேதிய 264ஆம் இலக்க, 1988.02.11ஆம் தேதிய 6/88ஆம் இலக்க, 1994.02.07 ஆம் தேதிய 08/94ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளும், 1993.10.01 ஆம் தேதிய 24/93ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் IIIஆம் பகுதியும் மீளப்பெறப்பட்டு, அவற்றின் இடத்திற்கு பின்வரும் விடயங்கள் தொடர்பாக புதிய ஏற்பாடுகள் 1999.09.15 ஆம் தேதி முதல் செயற்பாட்டுக்கு வருதலாதல் வேண்டும்.

(01) 1.1 அரசகரும வாகனங்கள் குறித்தொதுக்கப்பட அனுமதிக்கப்பட்டுள்ள அலுவலர்கள்

பின்வரும் அலுவலர்கள் அரசகரும நோக்கங்களுக்கும், அலுவலகத்திற்கும் வதிவிடத்திற்கும் இடையிலான பயணங்களுக்கும் அரசகரும வாகனமொன்றினை உபயோகிப்பதற்கு அனுமதிக் கப்பட்டுள்ளனர். இந்த விடயத்தில் வதிவிடத்திற்கும் அலுவலகத்திற்கும் இடையிலான ஆகக்கூடிய தூரம் 40 கிலோ மீற்றர்கள் தூரத்திற்கு மேற்படக்கூடாது. எவ்வாறாயினும், இவ்வலுவலர்களுள் 02 ஆம் பந்தியின் கீழ் தகமை பெறும் அலுவலர்கள் தமது தனிப்பட்ட பயணங்களுக்கும் அரசகரும வாகனங்களை உபயோகிப்பதற்கு உரித்துடையவராவர் என்பதுடன் இவர்கள் விடயத்தில் 40 கிலோமீற்றர் தூர மட்டுப்பாடனது பொருந்த மாட்டாது.

1.1.1 அரசாங்க சேவைகளில் இருக்கும் நாநாவித பதவிகள்

(i) சனாதிப்தியின் செயலாளர்
(ii) அமைச்சரவைச் செயலாளர்
(iii) பிரதம அமைச்சரின் செயலாளர்
(iv) அமைச்சரவை அமைச்சுக்களின் செயலாளர்கள்
(v) கணக்காய்வாளர் அதிபதி
(vi) தேர்தல் ஆணையாளர்
(vii) திறைசேரிப் பிரதிச் செயலாளர்
(viii) சனாதிபதி செயலகம், பிரதம அமைச்சர் அலுவலகம், அமைச்சரவை அலுவலகம் ஆகியவற்றின் மேலதிகச் செயலாளர்கள்
(ix) அமைச்சரவை அமைச்சுக்களின் மேலதிகச் செயலாளர்கள்
(x) அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்
(xi) அமைச்சரவை அமைச்சு, திணைக்களம் ஒன்றின் பணிப்பாளர் அதிபதி/ ஆணையாளர், அதிபதி, புகையிரத பொது முகாமையாளர்

(xii) அமைச்சரவை அமைச்சுக்களின் சிரேஷ்ட உதவிச் செயலாளர்கள்

(xiii) அமைச்சரவை அமைச்சுக்களின் கீழ் இருக்கும் அமைச்சரவை அமைச்சுக்களின் கீழ் இல்லாத திணைக்களத் தலைவர்கள்.

(xiv) பணிப்பாளர், கட்டுப்பாட்டாளர் அல்லது ஆணையாளர்/ மேலதிக பணிப்பாளர்/மேலதிக ஆணையாளர்/ மேலதிகக் கட்டுப்பாட்டாளர்/ அத்துடன் புகையிரத மேலதிக பொது முகாமையாளர் ஆகிய அத்தகைய பதவிகளை வகிக்கும் அலுவலர்களும், ரி-7-1 சம்பள அளவுத்திட்டத்தில் அல்லது அதற்குக் கூடியதொரு சம்பள அளவுத்திட்டத்தில் இருப்பவர்களுமான அலுவலர்கள்.

(xv) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளர், நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலாளர், கூட்டுறவுத் தொழிலாளர் ஆணைக்குழுச் செயலாளர்

(xvi) மேலதிக மாவட்டச் செயலாளர்

(xvii) பிரதேசச் செயலாளர்

(xviii) அமைச்சரவை அமைச்சுக்களில் பிரதான கணக்காளர்பதவிகள்வகிக்கும் இருக்கும் இலங்கைக் கணக்காளர் சேவை, வகுப்பு I இல் இருக்கும் கணக்காளர் கள்

(xix) சனாதிபதியினால் அல்லது அமைச்சரவை அமைச்சுக்களால் நியமிக்கப்பட்ட ரி-7-1 சம்பள அளவுத்திட்டத்தின் தொடக்க சம்பளப் படிநிலையில் அல்லது அதற்கும் கூடிய சம்பளத்தில் வேறு சிறப்புப் பதவிகளில் இருக்கும் அலுவலர்கள்.

(xx) அமைச்சரவை அமைச்சர்களினதும் பிரதி அமைச்சர்களினதும் அனுக்கச் செயலாளர், இணைப்புச் செயலாளர்/பொது உறவு அலுவலர்.

(xxi) அமைச்சரவை அமைச்சொன்றின் செயலாளரின் இணைப்புச் செயலாளர்.

1.1.2 <u>நீதித்துறை அலுவலர்கள்</u>

(i) பிரதான நீதியரசர்

(ii) உயர் நீதிமன்ற நீதிபதிகள்

(iii) மேன் முறையீட்டு நீதிமன்றத் தலைவர்

(iv) மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள்

(v) மேல் நீதிமன்ற நீதிபதிகள்

(vi) மாவட்ட நீதிமன்ற நீதிபதிகள்

(vii) நீதவான்கள்

(viii) தொழில் நீதிமன்றத் தலைவர்கள்

(ix) ஆரம்ப நீதிமன்ற நீதிபதிகள்

(x) வேலையாளர் இழப்பீட்டு ஆணையாளர்

1.1.3. <u>சட்டத்துறை அலுவலர்கள்</u>

(i) சட்டத்துறை அதிபதி

(ii) மன்றாடி அதிபதி

(iii) மேலதிக மன்றாடி அதிபதி

(iv) சட்ட வரைஞர்கள்

(v) மேலதிக சட்ட வரைஞர்

(vi) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய குற்றச்சாட்டுகளை நுண்ணாய்வு செய்வதற்கு நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் பணிப்பாளர் அதிபதி

(vii) பிரதி மன்றாடி அதிபதி

(viii) பிரதி சட்ட வரைஞர்

(ix) சிரேஷ்ட அரச சட்டத்தரணி/சிரேஷ்ட அரச சட்டவாதி

(x) அரச சட்டத்தரணி/ அரச சட்டவாதி

(xi) சிரேஷ்ட உதவிச் சட்ட வரைஞர்

(xii) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய குற்றச்சாட்டுக்களை நுண்ணாய்வு செய்வதற்கு நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் பிரதி பணிப்பாளர் அதிபதி

1.1.4 <u>பொலிஸ் உத்தியோகத்தர்கள்</u>

(i) பொலிஸ் பரிசோதகர் அதிபதி

(ii) சிரேஷ்ட பிரதி பொலிஸ் பரிசோதகர் அதிபதி

(iii) பிரதி பொலிஸ் பரிசோதகர் அதிபதி

(iv) சிரேஷ்ட பொலிஸ் கண்காணிப்பாளர்

(v) பொலிஸ் கண்காணிப்பாளர்

(vi) உதவி பொலிஸ் கண்காணிப்பாளர் .

1.1.5 <u>மாகாண அரசாங்க சேவையிலுள்ள அலுவலர்கள்</u>

(i) மாகாண சபை ஒன்றின் பிரதான செயலாளர்

(ii) மாகாண அமைச்சு ஒன்றின் செயலாளர்

(iii) மாகாண ஆளுநருக்கான செயலாளர்

(iv) மாகாண சபை ஒன்றின் செயலாளர்

(v) மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு ஒன்றின் செயலாளர்

(vi) மாகாணச் செயலகம் ஒன்றின் பிரதிச் செயலாளர்

(vii) மாகாண அமைச்சுக்களின் கீழுள்ள மாகாண திணைக்களத் தலைவர்கள்

1.1.6. <u>அரசாங்க கூட்டுத்தாபனங்கள்</u>

(i) அரசாங்க கூட்டுத்தாபனம்/நியதிச் சட்டச்சபை ஒன்றின் தவிசாளர்

(ii) அரசாங்கத்திற்குச் சொந்தமான வியாபாரப் பொறுப்பேற்பு ஒன்றின் தகுதியான அதிகாரி

(iii) அரசாங்க கூட்டுத்தாபனம் நியதிச் சட்டச்சபை ஒன்றின் தொழிற்படும் பணிப்பாளர்

(iv) அரசாங்க கூட்டுத்தாபனம்/நியதிச் சட்டச்சபை ஒன்றின் பொது முகாமையாளரும் மேலதிக பொது முகாமையாளரும்

(v) அரசாங்க கூட்டுத்தாபன/நியதிச் சட்டச்சபை ஒன்றின் பணிப்பாளர் சபை யினால்/ வாகனமொன்று வழங்கப்படல் வேண்டுமென தீர்மானமொன்று எடுக்கப்பட்டு அத்தீர்மானம் பொருத்தமான அமைச்சின் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க கூட்டுத்தாபனங்களின் /நியதிச் சட்டச் சபைகளின் அத்தகைய சிரேஷ்ட அலுவலர்கள்

குறிப்பு :- ஒரு வாகனம் வழங்கப்படுவதற்கு தகுதியுடையவராகவிருக்கும் ஓர் அலுவலர், ஒத்திவைக்க முடியாத அவசர அலுவலகக் கடமை காரணமாக வாகனத்தைச் செலுத்துவதற்கான கட்டாயத்திற்குள் உட்பட்டிருக்கிறார் என ஒரு நிறுவனத் தலைவர் தனிப்பட்ட முறையில் தாம் திருப்திப்படுவாராயின் ஓர் அரசகரும வாகனத்தைச் செலுத்த அத்தகைய அலுவலரை அனுமதிக்கலாம். தொடர்புடைய அரசகரும வாகன வகுப்பைச் சேர்ந்த வாகனமொன்றைச் செலுத்துவதற்கான உத்தரவுப்பத்திரம் ஒன்றை சம்பந்தப்பட்ட அலுவலர் வைத்திருந்தால் மட்டும் இவ்வனுமதியானது வழங்கப் படலாம்.

1.2 <u>1.1.1 முதல் 1.1.6 ஆம் பந்திகளுக்குள் உட்படாத அலுவலர்களைப் பற்றிய ஏற்பாடுகள்</u>

(i) இணைப்பு 1 இற்கு அமைய 1.1.1 முதல் 1.1.6 ஆம் பந்திகளுக்குள் உட்படாத, ஆனால் அரசகருமக் கடமைகளுக்கும் 40 கிலோ மீற்றர் தூரத்திற்குள் அலுவலகத்திற்கும் வதிவிடத்திற்குமிடையிலான பயணங்களுக்கும் அரசகரும

வாகனமொன்றினை உபயோகிக்க ஒவ்வொரு அம்சத்திலும் தகைமை உடைய அலுவலர்களைப் பற்றித் தயாரிக்கப்பட்ட பெயர்குறித்த நியமிப்புகளானவை, அமைச்சுக்களின் பொருத்தமான செயலாளர்கள் தாமே அளித்த விதப்புரையுடன் அரசாங்க நிருவாகம் எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

(ii) அத்தகைய விண்ணப்பங்கள் பின்வரும் அலுவலர்களைக் கொண்ட குழுவொன்றினால் ஆராயப்பட்டு அக்குழுவின் முடிவானது பொருத்தமான செயலாளர்களுக்கு தெரிவிக்கப்படும்.

(அ) அரசாங்க நிருவாகம் என்னும் விடயம் எந்த அமைச்சின் கீழ் உள்ளதோ அவ்வமைச்சின் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரின் பிரதிநிதியொருவர்

(ஆ) நிதி எனும் விடயம் எந்த அமைச்சின் கீழ் உள்ளதோ அவ்வமைச்சின் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரின் பிரதிநிதியொருவர்

(இ) போக்குவரத்து எனும் விடயம் எந்த அமைச்சின் கீழ் உள்ளதோ அவ்வமைச்சின் செயலாளர் அல்ல்து அத்தகைய செயலாளரின் பிரதிநிதியொருவர்

1.3 <u>பிரதி அலுவலர்கள் மட்டத்தில் பதவிகள் வகிக்கும் அலுவலர்களுக்கு போக்குவரத்து வசதிகள் அளித்தல்</u>

1.3.1 சேவையின் அத்தியாவசியம் காரணமாக வாகனங்களும், எரிபொருளுக்கான ஏற்பாடுகளும் கிடைக்கப்பெறுமிடத்து, நிறுவனத் தலைவரின் தற்றுணிபில் அலுவலகத்திற்கும் வதிவிடத்திற்கு அண்மித்த இடங்களுக்கும் இடையிலான பயணத்திற்கு பின்வரும் அலுவலர்களுக்கு தொகுதிவாகன வசதிகள் அளிக்க முடியும். இவ்விடயத்தைப் பொறுத்தவரை, இரு இடங்களுக்குமான இடைத்தூரம் 40 கிலோ மீற்றர்களுக்கு கூடக்கூடாது. அத்தகைய வாகனமொன்று இரவு நேரத்தில் நிறுத்திவைக்கப்பட வேண்டிய இடமானது அந்நிறுவனத் தலைவரால் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

(i) அமைச்சரவை அமைச்சு ஒன்றில் திணைக்களம் ஒன்றில் அகில தீவுச் சேவை வகுப்பு I அல்லது வகுப்பு II/I ஐச் சேர்ந்த அத்தகைய பதவிகளான பிரதிப் பணிப்பாளர், பிரதி ஆணையாளர், பிரதிக் கட்டுப் பாட்டாளர் பதவிகளில் இருக்கும் அல்லது வேறு சேவைகளில் அதே மட்டத்தில் இருக்கும் அலுவலர்கள்.

(ii) மாகாண அமைச்சுக்களின் மாகாண பிரதான செயலாளர்களின் அலுவலகத்தில் அல்லது அத்தகைய அமைச்சுக்களின் கீழ் உள்ள திணைக்களங்களில் பிரதி அலுவலர்கள் மட்டத்தில் இருக்கும் அகில தீவுச் சேவை வகுப்பு I அல்லது வகுப்பு II/I ஐச் சேர்ந்த அலுவலர்களும் வேறு சேவைகளில் அதே மட்டத்தில் இருக்கும் அலுவலர்களும்.

(iii) அரசாங்க கூட்டுத்தாபனங்களில் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப் பெற்ற நிறைவேற்றுப் பதவிகளில் இருக்கும் அலுவலர்கள்.

02. <u>தனிப்பட்ட பயணங்களுக்கு அரசகரும வாகனங்களை உபயோகிப்பதற்கு அனுமதிக் கப்பட்டுள்ள அலுவலர்கள்</u>

2.1 பின்வரும் பதவிகளை வகிக்கும் அலுவலர்கள் தமது தனிப்பட்ட பயணங்களுக்கு மாதமொன்றுக்கு ரூபா 150/= செலுத்துவதன் மேல் அலுவலக வாகனங்களை தனிப்பட்ட அலுவல்களுக்கு உபயோகிக்க அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(i) பிரதான நீதியரசர்
(ii) சட்டத்துறை அதிபதி
(iii) உயர் நீதிமன்ற நீதிபதிகள்

(iv) மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர்
(v) மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள்
(vi) மன்றாடி அதிபதி
(vii) சனாதிபதியின் செயலாளர்
(viii) அமைச்சரவைச் செயலாளர்
(ix) பிரதம அமைச்சரின் செயலாளர்
(x) அமைச்சரவை அமைச்சு ஒன்றின் செயலாளர்
(xi) கணக்காய்வாளர் அதிபதி
(xii) தேர்தல் ஆணையாளர்
(xiii) திறைசேரிப் பிரதிச் செயலாளர்
(xiv) மாகாண சபை ஒன்றின் பிரதான செயலாளர்
(xv) அரசாங்க கூட்டுத்தாபனம் ஒன்றின் தவிசாளர்
(xvi) அரசாங்கத்திற்கு கையளிக்கப்பட்டுள்ள நிறுவனம் ஒன்றின் தகுதி வாய்ந்த அதிகாரி
(xvii) அமைச்சரவை அமைச்சர் ஒருவரின் அணுக்கச் செயலாளர்

2.2 பின்வரும் அலுவலர்கள் மாதமொன்றுக்கு ரூபா 100/= செலுத்துவதன் மேல் அரசகரும வாகனங்களை தமது தனிப்பட்ட பயணங்களுக்கும் உபயோகிக்க அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

2.2.1 <u>அரசாங்க சேவையில உள்ள நாநாவித பதவிகள்</u>

(i) சனாதிபதி செயலகம், பிரதம அமைச்சரின் அலுவலகம், அமைச்சரவை அலுவலகம் ஆகியவற்றின் மேலதிகச் செயலாளர் கள்
(ii) அமைச்சரவை அமைச்சுக்களின் மேலதிகச் செயலாளர்
(iii) அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்
(iv) அமைச்சரவை அமைச்சின்/ திணைக்களத்தின் பணிப்பாளர் அதிபதி/ மேலதிகப் பணிப்பாளர் அதிபதி/ ஆணையாளர் அதிபதி/ மேலதிக ஆணையாளர் அதிபதி/ புகையிரத பொது முகாமை யாளர்
(v) அமைச்சரவை அமைச்சுக்களின் சிரேஷ்ட உதவிச் செயலாளர்கள்
(vi) அமைச்சரவை அமைச்சுக்களின் கீழ்வரும், அமைச்சரவை அமைச்சுக்களின் கீழ் வராத திணைக்களத் தலைவர்கள்.
(vii) பொது திறைசேரியால் அங்கீகரிக்கப்பெற்ற பணிப்பாளர், கட்டுப்பாட்டாளர் அல்லது ஆணையாளர் போன்ற அத்தகைய பதவிகளில் ரி-7-1 சம்பள அளவுத்திட்டத்தில் அல்லது அதற்கும் கூடிய ஒரு சம்பள அளவுத்திட்டத்தில் பதவிவகிக்கும் அலுவலர் கள்.
(viii) அரசாங்க சேவை ஆணைக்குளுவின் செயலாளர், நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர், கூட்டுறவுத் தொழிலாளர்கள் ஆணைக்குழுவின் செயலாளர்.
(ix) மேலதிக மாவட்டச் செயலாளர்
(x) பிரதேசச் செயலாளர்
(xi) அமைச்சரவை அமைச்சுக்களில் பிரதான கணக்காளர் பதவிகளை வகிக்கும் இலங்கை கணக்காளர் சேவையின் வகுப்பு I ஐச் சேர்ந்த அலுவலர்கள்

### 2.2.2 நீதித்துறை அலுவலர்கள்

- (i) மேல் நீதிமன்ற நீதிபதிகள்
- (ii) மாவட்ட நீதிமன்ற நீதிபதிகள்
- (iii) நீதவான்கள்
- (iv) தொழில் நியாயசபைத் தலைவர்கள்
- (v) ஆரம்ப நீதிமன்ற நீதிபதிகள்
- (vi) வேலையாட்கள் இழப்பீட்டு ஆணையாளர்

### 2.2.3 சட்டத்துறை அலுவலர்கள்

- (i) மேலதிக மன்றாடி அதிபதி
- (ii) சட்டவரைஞர்
- (iii) மேலதிக சட்ட வரைஞர்
- (iv) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய குற்றச்சாட்டுக்களை நுண்ணாய்வு செய்ய நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் பணிப்பாளர் அதிபதி
- (v) பிரதி மன்றாடி அதிபதி
- (vi) சிரேஷ்ட அரச சட்டத்தரணி/ சிரேஷ்ட அரச சட்டவாதி
- (vii) அரச சட்டத்தரணி/அரச சட்டவாதி
- (viii) பிரதி சட்ட வரைஞர்கள்
- (ix) சிரேஷ்ட உதவிச் சட்ட வரைஞர்கள்
- (x) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய குற்றச்சாட்டுக்களை நுண்ணாய்வு செய்ய நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் பிரதிப் பணிப்பாளர் அதிபதி

### 2.2.4 பொலிஸ் அலுவலர்கள்

- (i) பொலிஸ் பரிசோதகர் அதிபதி
- (ii) சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் பரிசோதகர் அதிபதி
- (iii) பிரதி பொலிஸ் பரிசோதகர் அதிபதி

### 2.2.5 மாகாண அரசாங்க சேவை அலுவலர்கள்

- (i) மாகாண அமைச்சொன்றின் செயலாளர்
- (ii) மாகாண ஆளுநர் ஒருவருக்கான செயலாளர்
- (iii) மாகாண சபைச் செயலாளர்
- (iv) மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளர்
- (v) மாகாணச் செயலகத்தில் உள்ள பிரதிச் செயலாளர்
- (vi) ரி-7-1 சம்பள அளவுத்திட்டத்திற்கு அல்லது அதற்கும் கூடிய சம்பள அளவுத்திட்டத்திற்கு உரித்துடைய மாகாண அமைச்சுக்களின் கீழ்வரும் மாகாணத் திணைக்களங்களின் திணைக்களத் தலைவர்கள்

### 2.2.6 அரசாங்க கூட்டுத்தாபனங்கள்

- (i) அரசாங்க கூட்டுத்தாபனம்/ நியதிச் சட்டச்சபை ஒன்றின் தொழிற்படு பணிப்பாளர்.
- (ii) அரசாங்க கூட்டுத்தாபனம்/ நியதிச்சட்டச்சபை ஒன்றின் பொது முகாமையாளர்

2.3 **<u>உட்பந்திகள் 2.1 முதல் 2.2.5 க்குள் உட்படாத அலுவலர்கள் தொடர்பான பொது ஏற்பாடுகள்</u>**

(i) உட்பந்திகள் 2.1 முதல் 2.2.5 க்குள் உட்படாத சம மட்டத்தில் உள்ள அலுவலர் ஒருவர் பற்றி பெயர் குறித்த நியமனம், இணைப்பு I க்கு அமையத் தயாரிக்கப்பட்டு பொருத்தமான அமைச்சின் செயலாளரின் விதப்புரையுடன் அரசாங்க நிருவாகம் எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

(ii) இப் பெயர் குறித்த நியமிப்புக்கள் கூட மேற்போந்த 1.2 (II)ஆம் உட் பந்தியிற் கூறப்பட்டுள்ள குழுவினால் பரிசீலிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படல் வேண்டுமென அது கருத்திற்கொள்ளும் பெயர்குறித்த நியமிப்புக்கள் பற்றிய அக்குழுவின் விதப்புரைகள் அரசாங்க நிருவாகத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு ஊடாக அமைச் சரவைக்கு அனுப்பப்படல் வேண்டும். அத்தகைய அலுவலர் ஒருவர், அமைச் சரவையால் அங்கீகாரம் வழங்கப்படுமிடத்து, தனது தனிப்பட்ட உபயோகத்திற்கும் ஓர் அரச கரும வாகனத்தை உபயோகிப்பதற்கு, சந்தர்ப்பத்திற்கேற்றவாறு, 2.1 அல்லது 2.2 உட்பந்திகளின் கீழ் தகைமை உடையவராக கருதப்படுவர்.

2.4 <u>பொதுவான ஏற்பாடுகள்</u>

(i) அரசகரும வாகனம் ஒன்றை தமது தனிப்பட்ட பயணங்களுக்கு உபயோகப்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ள அலுவலர் ஒருவர் அதே வகுப்பு வாகனத்தைச் செலுத்துவதற்கான உத்தரவுப் பத்திரம் ஒன்றினை அவர் வைத்திருக்குமிடத்து, அத்தகைய தனிப்பட்ட சொந்தப் பயணத்திற்கு அத்தகைய வாகனத்தைச் செலுத்தவும் அனுமதிக்க முடியும் என்பதுடன் அத்தகைய அனுமதியானது அலுவலர் விரும்புமிடத்து அரசகரும பயணங்களுக்கும் நீடிக்க முடியும்.

(ii) தனிப்பட்ட பயணங்களுக்கு உபயோகப்படுத்தப்பட அனுமதிக்கப்பட்ட அரசகரும வாகனங்களானவை, அகல்விரிவான காப்புறுதித்திட்டம் ஒன்றின் கீழ் காப்புறுதி செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் அவற்றிற்கான கட்டுப்பணம் நிறுவனங்களினால் செலுத்தப்படற்பாலதாதலும் வேண்டும்.

(iii) அவரது தனிப்பட்ட பயணங்களுக்கு அரசகரும வாகனம் ஒன்று ஒதுக்கப்பட்டுள்ள அலுவலர் ஒருவர் அத்தகைய வாகனத்தை தனது வதிவிடத்தில் வைத்திருக்க அனுமதிக்கப்படல் வேண்டும்.

(iv) அரசகரும வாகனங்களுக்கு வழங்கப்படும் எரிபொருளின் அளவு எல்லைகள் அரசாங்கத்தால் காலத்துக்கு காலம் வினைப்படுத்தப்படும் அறிவுறுத்தல்களுக்கு இசைவானதாக இருத்தல் வேண்டும்.

03. <u>தாம் இளைப்பாறும் நேரத்தில் தமது சொந்த உபயோகத்தில் வைத்திருந்த அரசகரும வாகனம் ஒன்றினை தமது சொந்தப் பெயருக்கு உடமை மாற்றம் செய்வதற்கு தகைமை உடைய அலுவலர்கள்</u>

3.1 நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமான பதவியொன்றினைவகிக்கும் ஓர் அரசாங்க அலுவலர்/ஒரு நீதித்துறை அலுவலர், பின்வரும் தகைமைகளைக் கொண்டிருப்பதுடன் 3.2 ஆம் உட்பிரிவின் கீழ் தகமை நீக்கம் செய்யப்படா திருக்குமிடத்து, 3.3 ஆம் உட்பந்தியில் வெளிப்படுதப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய அவர் தம்மால் உபயோகிக்கப்பட்டு வந்த வாகனத்தை தமது சொந்தப் பெயருக்கு உடைமை மாற்றம் செய்தலை அனுமதிக்க முடியும். இச் சலுகை ஓர் அலுவலரின் வாழ்க்கையில் ஒரேயொருமுறை மட்டும் அவர் பெறமுடியும்.

<u>தகைமைகள்</u>

(i) அரசகரும வாகனமொன்று ஒதுக்கப்பட்டிருந்து, தனிப்பட்ட நோக்கங்களுக்கும் குறிப்பிட்ட வாகனத்தை உபயோகப்படுத்துவதற்கு 02 ஆம் பிரிவின் கீழ் அனுமதி அளிக்கப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

அத்துடன்

(ii) அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இல.02/97(iii) இன் நியதிகளுக்கு அமைய, ரி-7-1 சம்பள அளவுத்திட்டத்தின் ஆரம்ப சம்பளப் படிநிலைக்குச் சமனான சம்பளத்தில் அல்லது அதிலும் கூடியதொரு ஆரம்பச் சம்பளத்தில் நிரந்தர அடிப்படையில் நியமிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

3.2 இச் சலுகைக்கு தகைமையற்ற அலுவலர்கள்

(அ) ஓய்வூதிய பிரமாணக்குறிப்பின் 12.1ஆம் பிரிவிற்கு அமைய இளைப்பாற்றப்பட்ட ஓர் அலுவலர்

(ஆ) அரசாங்க நிருவாக/திறைசேரிச் சுற்றறிக்கையொன்றின் கீழ் சலுகைச் சுங்கத் தீர்வை மீது வாகனமொன்றை இறக்குமதி செய்து அவர் இளைப்பாறும் தேதியன்று அத்தகைய இறக்குமதி செய்யப்பட்ட தேதி முதல் 05 ஆண்டுகாலம் முடிறா நிலையிலுள்ள, ஓர் அலுவலர்

(இ) அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல.05/90 இன் ஏற்பாடுகளின் கீழ் வாகனமொன்றைக் கொள்வனவு செய்து அவர் இளைப்பாறும் தேதியன்று ஓராண்டு (01) காலம் கடக்காத நிலையிலுள்ள, ஓர் அலுவலர்

குறிப்பு:

(i) வாகனம் ஒன்றை தனது பெயருக்கு மாற்றி எடுப்பதற்கு அனுமதி அளிக்கப் பட்டுள்ள ஓர் அலுவலருக்காக பதிற்கடமை புரிய அனுமதிக்கப்பட்டுள்ள அலுவலர் ஒருவர் வாகனம் ஒன்றை தனது பெயருக்கு மாற்றி எடுக்கத் தகுதியற்றவராவர்

(ii) ஓர் அமைச்சில் அல்லது ஒரு திணைக்களத்தில் உள்ள ஓர் அலுவலர் வதிவிடத்திற்கும் அலுவலகத்திற்கும் இடையிலான பயணத்திற்கும் அத்துடன் தனிப்பட்ட பயணத்திற்கும் அரசகரும வாகனம் ஒன்றினை உபயோகிக்க அனுமதிக்கப்பட்டுள்ளார் எனும் காரணம் மட்டும் அரசகரும வாகனம் ஒன்றினை அவருடைய பெயருக்கு மாற்றுவதற்கு ஒரு தகைமையாக அமையமாட்டாது.

3.3 ஓர் அரசகரும வாகனத்தின் உடைமை மாற்றப்படுகையில் பொருந்தப்படற்பால தான நியதிகளும் நிபந்தனைகளும்:

பின்வரும் நியதிகளையும் நிபந்தனைகளையும் பூர்த்தி செய்தால் மட்டும் மேற் போன்ற ஏற்பாடுகின் கீழ் தகைமைபெற்றுள்ள அலுவலர் ஒருவருக்கு அரசகரும வாகனம் ஒன்றின் உடைமையானது மாற்றப்பட முடியும்.

(அ) உடைமை மாற்றமானது அரசாங்கத்தால் இந்நாட்டிற்குள் இறக்குமதி செய்யப்பட்ட வாகனம் ஒன்று அது இறக்குமதி செய்யப்பட்ட தேதி யிலிருந்து ஓராண்டு காலத்திற்கு மேல் கடக்காத நிலையிலுள்ள வாகனம் ஒன்று சம்பந்தமானதாகவிருக்குமிடத்து, 1999.06.23 ஆம தேதிய 866(I) ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையினால் திருத்தப்பட்டவாறான 1999.02.22 ஆம் தேதிய 866 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் 2 (1) ஆம் பந்தியில் விதத்துரைக்கப்பட்ட கொடுபனவுகளுக்கு அமைய அத்தகைய மாற்றமானது செய்யப்படல் வேண்டும்.

(ஆ) ஓர் அலுவலர் தான் இளைப்பாறுகையில் அவர் உபயோகித்து வந்த வாகனம் ஒன்றிற்குப் பதிலாக இன்னொரு வாகனத்தைப் பெறுவதற்குச் செய்யும் விண்ணப்பத்தை அந்நிறுவனத்தில் உள்ள வளங்களைக் கருத்திற்கொண்டு, ஒரு அமைச்சின் செயலாளர் கருத்திற்கு எடுக்கலாம்.

(இ) ஒரு வாகனத்தின் உடைமையை தனது பெயருக்கு மாற்றி எடுப்பதற்கு உரித்துடைய ஓர் அலுவரின் உடைமை மாற்ற விண்ணப்பமொன்று கொடுபடவேண்டிய கட்டமானது, அவர் விருப்பு இளைப்பாற்றுத்

தேதியை அடைந்தபின் தனது இளைப்பாற்றுக் கடதாசிகளைச் சமர்ப்பிக்கும் தேதி யன்றாகும். எவ்வாறாயினும், அலுவலரொருவர், ஒரு மீளமைப்பு/ அரசாங்கத்தின் தீர்மானம் ஒன்றின் மேல் ஒரு திணைக்களத்தை மூடுதல் அல்லது ஒரு பதவியை இல்லாதொழித்தல் காரணங்களான அவரது கட்டுப் பாட்டிற்குள் அடங்காத காரணங்களுக்காக அவரது விருப்பு இளைப்பாற்று வயதை அடையுமுன் கட்டாய இளைப்பாறலுக்கு நிர்ப்பந்திக்கப்படின் அவர் ஆளாக நேரின் அவர் பின்வரும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யுமிடத்து அரசகரும வாகனமொன்றின் உடைமை மாற்றத்திற்கு அவர் விண்ணப்பிக்கலாம்.

(i) அரசாங்க சேவையில் அல்லது அரசாங்க கூட்டுத்தாபனம் ஒன்றில் மாற்றுத் தொழில் எதுவும் அரசாங்கம் அவருக்கு ஏற்பாடு செய்யவில்லை.

(ii) அலுவலரானவர் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட ஏதாவது அத்தகைய பதவியை அவர் ஏற்க மறுக்கவில்லை.

3.4 <u>உடைமை மாற்றம் செய்தற்கு பின்பற்றவேண்டிய நடவடிக்கை முறைகள்.</u>

(அ) அலுவலரொருவர் தான் இளைப்பாறும் வேளையில் ஒரு வாகனத்தின் உடைமையை தனது பெயருக்கு மாற்றுவதற்கு எப்போது விரும்பு கிறாரோ, இணைப்பு 2 இற்கு அமைய ஒரு விண்ணப்பம் தயாரித்து முறைப்படி பூர்த்தி செய்து பொருத்தமான திணைக்களத் தலை வருக்கு/அமைச்சின் செயலாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். தொடர் புடைய அமைச்சு, அதனது விதப்புரையுடனும், சம்பந்தப்பட்ட வாகனம் பற்றிய விபரங்களுடனும், மதிப்பிடும் நோக்கத்தின் பொருட்டு, அரசாங்க நிதித் திணைக்களத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

(ஆ) அவ்வாகனமானது எந்த அமைச்சிற்கு திணைக்களத்திற்குச் சேர்ந்ததோ, அந்த அமைச்சின் செயலாளர்/ திணைக்களத் தலைவர் சம்பந்தப்பட்ட அலுவலரிட மிருந்து சந்தர்ப்பம் தேவைப்படுத்துமாறு, அரசாங்க நிதிப் பணிப்பாளர் அதிபதியினால் மதிப்பிடப்பட்ட தொகை, முத்திரைக் கட்டணங்கள், மாற்றம் செய்தற்கான கட்டணங்கள் முதலியவற்றை அவ்வலு வலரிடமிருந்து அறவிட்டபின் மாற்றத்தைப் பூர்த்தி செய் தலுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

மஹிந்த பந்துசேன
செயலாளர்,
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு.

**இணைப்பு 1**

22/99 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் 1:2 அல்லது 2:3 ஆம் பந்தியின் கீழ் செய்யப்பட்ட பெயர் குறித்த நியமிப்பு

---

01. அமைச்சு/ திணைக்களம்:

02. நியமிக்கப்பட்ட அலுவலரின் பெயர்:

03. (அ) பதவி:
    (ஆ) பதவிக்கு நியமிக்கப்பட்ட தேதி:

04. பதவிக்கு உரிய சம்பள அளவுத்திட்டம்:

05. (i) அலுவலக முகவரி:

    (ii) வதிவிடத்தின் சொந்த முகவரி:

    (iii) அலுவலகத்திலிருந்து வதிவிடத்திற்கான தூரம்:- கி.மீ .

06. முதுமுறை ஒழுங்கில் அலுவலருக்கு அடுத்துள்ள அலுவலரின் பதவிப் பெயர்:

07. முறைப்படி அலுவலர் மீதுள்ள கடமைகளின் விபரங்கள்:

08. அலுவலரின் கண்காணிப்பின் கீழ் இருக்கும் அலுவலர்களின் எண்ணிக்கை (வேறாகத் தரப்படல் வேண்டும்.)

09. அலுவலரின் கட்டுப்பாட்டிற்குக் கீழிருக்கும் சிறப்புச் செய்திட்டங்கள் பற்றிய விபரங்களும், செலவினத் தலைப்புக்களின் விபரங்களும்:

10. முறைப்படி அலுவலர் மீதுள்ள வெளிக்களக் கடமைகளும், அவர் சென்று பார்க்க வேண்டியுள்ள இடங்களும், நாளாந்தம் பயணம் செய்யவேண்டிய அவசிய தேவை உண்டா என்பதும்:

11. இந்நோக்கத்தின் பொருட்டு பொதுப் போக்குவரத்து வசதிகளை உபயோகிக்க முடியாததற்கான காரணங்கள்?:

12. இவ்வசதிகளை ஏற்கெனவே பெற்றுள்ள அலுவலர்களின் பெயர்களும், பதவிகளும்;

13. ஏற்கனவே கிடைக்கப்பெறும் ஏற்பாடுகளின் கீழ் இவ்வசதிகளை அளிக்க முடியுமா?

14. வேறு சிறப்பு விடயங்கள்:

15. மேற்போந்த கூற்றுக்கள் சரியானவை என உறுதிப்படுத்துவதுடன் மேலே குறிப்பிட்டுள்ள அலுவலர் .............................ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் ..............ஆம் பந்தியின் கீழ் அரசகரும வாகனம் ஒன்றை உபயோகிப்பதற்கு அனுமதிக்கலாம் என்றும் நான் விதந்துரைக்கிறேன்.

செயலாளர்.

...........................

............ ............... அமைச்சு.

கையொப்பமும் அலுவலக முத்திரையும்.

இல 22/99 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தியின் கீழ் அரசாங்க வாகனத்தின் உடைமை மாற்றம் செய்தலுக்கான விண்ணப்பம்.

01. பெயர் :- ..........................................................................

02. பிறந்த தேதி :- ..........................................................................

03. (i) முதல் நியமனத்தின் பதவிப் பெயர்:- ..........................................................

(ii) நியமனத்தேதி :- ..........................................................................

(iii) இளைப்பாறிய தேதியன்றுவரை முழுச் சேவைக்காலம் :- ....................................

04. (i) இளைப்பாறிய போது வகித்த பதவியின் பெயர் :- ..............................................

(ii) அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட தேதி :- ...........................................................

(iii) இளைப்பாறிய தேதி :- ..........................................................................

05. (i) 2/97 (iii) ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் நியதிகளுக்கமைய சம்பளத் தொகுதி :- ..........................................................................

(ii) சம்பள அளவுத்திட்டம் :- ..........................................................................

(iii) சம்பளப் படிநிலை :- ..........................................................................

06. இச்சுற்றறிக்கையின் 3:1 ஆம் பந்தியின் கீழ் அலுவலர் தகைமை உடையவரா?

..........................................................................

07. (i) 24/93 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் அல்லது 866 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் கீழ் வழங்கப்பட்ட சலுகையின் கீழ் வாகனமொன்று இறக்குமதி செய்யப்பட்ட தேதியும், பதிவிலக்கமும் அத்தகைய இறக்குமதி தொடர்பான வேறு விபரங்களும் பொருத்தமானவிடத்து.

..........................................................................

(ii) 05/90 ஆம் இலக்க அ.நி. சுற்றறிக்கையின் கீழ் வாகனமொன்றினைக் கொள்வனவு செய்வதற்கு, நடவடிக்கை எடுத்தாரா? அவ்வாறாயின்:-

..........................................................................

(அ) உடன்படிக்கையின் திகதி :- ..........................................................................

(ஆ) கொள்வனவு செய்யப்பட்ட திகதி :- ..........................................................

(இ) வாகனத்தின் பதிவு இலக்கமும் மற்றும் விபரங்களும் :-

..........................................................................

08. (i) அலுவலர் விருப்பு இளைப்பாறத் தேதியை அடையுமுன் இளைப்பாறுகின்றாரா?

..........................................................................

(ii) அவ்வாறாயின், சுற்றறிக்கையின் 3:3 (இ)ஆம் கூட்டினாற் தேவைப்படுத்தப்பட்டுள்ள தகவலைத் தருவதுடன், தகைமையையும் உறுதிப்படுத்தவும்.

..........................................................................

09. (i) அலுவலர் ஓய்வூதிய விண்ணப்பக் கடதாசிகள் சமர்ப்பித்த வேளையில் விண்ணப்பித்துள்ள வாகனம் அவருக்கு ஒதுக்கப்பட்டிருந்ததா?

..........................................................................

(ii) ஒதுக்கப்பட்ட தேதி :- ..........................................................................

(iii) பதிவிலக்கம் உள்ளடங்கலாக, மற்றும் விபரங்கள் :- ..................................................

10. <u>மாற்றப்படுவதற்கு விண்ணப்பித்துள்ள வாகனம் பற்றிய தகவல்.</u>

(i) பதிவு இலக்கம் :- ..................................................

(ii) ஆக்கமும் மாதிரியும் :- ..................................................

(iii) கொள்வனவு செய்யப்பட்ட தேதி :- ..................................................

(iv) கொள்வனவு செய்யப்பட்ட தேதியன்றுள்ளபடியான, சுங்கத் தீர்வை, மற்றும் வரிகள் உள்ளடங்கலாக, வாகனத்தின் முழுப் பெறுமதி ரூபா ..................................................

(அ) ஆகுசெலவு, காப்பறுதி, கேள்வுப் பெறுமதி ரூபா ..................................................

(ஆ) சுங்கத் தீர்வை, மற்றும் வரிகள்/விதிப்புக்கள் ரூபா ..................................................

(இ) உள்ளூர் முகவர் கட்டணங்கள் ரூபா ..................................................

(ஈ) நாணயக் கடிதத்துக்கான விதிப்புக்கள் ரூபா ..................................................

(உ) துறைமுகக் கட்டணங்கள் ரூபா ..................................................

(ஊ) மற்றும் செலவினங்கள் ரூபா ..................................................

(எ) சென்ற ஆண்டுக்காலத்தின் போது பிழை திருத்தங்களும், உதிரிப்பாக செலவினங்களும், பொருத்தமான விபரங்களும் ரூபா ..........................................

மேற்போந்த தகவல் உண்மையானவையும் செம்மையானவையும் என நான் உறுதிப்படுத்துகிறேன்.

தேதி

........................

விண்ணப்பகாரனின் கையொப்பம்

..................................................

..................................................

செயலாளர்

எனது இல.

..............................................அமைச்சு

இந்த அலுவலகத்தில் பேணப்பட்டு வரும் இவ்வலுவலரின் பெயர்வழிக் கோப்பினையும் குறித்த வாகனம் தொடர்பான கோவையையும் பரிசோதித்து, இவ்வலுவலர் பற்றியும் இந்த வாகம் பற்றியும் 01 முதல் 10 ஆம் வினாக்களுக்கு தரப்பட்ட தகவல்கள் உண்மையானவையும் செம்மையானவையும் என நான் உறுதிப்படுத்துகிறேன். 22/99 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் 3:1 ஆம் பந்தியின் நியதிகளுக்கு அமைய இந்த வாகனத்தைக் கொள்வனவு செய்வதற்கு இந்த அலுவலர் தகைமை உடையவர்/தகமையற்றவர்.

திகதி :-

..............................................

திணைக்களத் தலைவரின் கையொப்பம்

..................................................திணைக்களம்

கையொப்பமும் அலுவலக முத்திரையும்

..................................................எனது இல.

அரசாங்க நிதிப் பணிப்பாளர்,

இந்த அலுவலர் இச் சுற்றறிக்கையின் கீழ் வாகனம ஒன்றை தனது பெயருக்கு மாற்றியெடுப்பதற்குத் தகைமை உடையவர் என்பதை நான் விதந்துரைக்கிறேன்.

திகதி :-

..............................

செயலாளர்

..................................................அமைச்சு

கையொப்பமும் அலுவலக முத்திரையும்

(பி.கு)

விண்ணப்பத்துடன் குறித்த வாகனம் தொடர்பான பதிவுச் சான்றிதழின் சான்றுபடுத்தப்பட்ட பிரதியொன்றும் விண்ணப்பத்துடன் அனுப்பப்படல் வேண்டும்.